


அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களுக்கான ஆய்வுக்கூட்டத்தை குறிஞ்சி இல்லத்தில் நேற்று முன்தினம் தலைமைக் கழகத்தின் ஆணைப்படியும் – இளைஞரணியின் முன்னெடுப்புகள் வழியாகவும் அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் செய்கின்ற பணிகள் குறித்து கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டறிந்தார். குறிப்பாக, ‘இல்லந்தோறும் இளைஞரணி’ பணிகள் மூலம் அரியலூர் – பெரம்பலூர் மாவட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் கலைஞர் நூற்றாண்டை அறிவுத்திருவிழாவாக கொண்டாடும் வகையில் இளைஞரணி சார்பில் தொகுதிதோறும் திறக்கப்பட்டு வரும் கலைஞர் நூலகம் குறித்தும் – நீட் ஒழிப்பு போராட்டங்கள் – #கலைஞர்100 பேச்சுப் போட்டி – நாடாளுமன்றத் தேர்தல் & விக்கிரவாண்டி இடைத்தேர்தல் பணி போன்றவை குறித்து ஒவ்வொருவரிடமும் தனித்தனியாக கேட்டு அவரவர் பணிகளுக்கு ஓர் ஆவணமாக மினிட் புத்தகம் – புகைப்படத் தொகுப்பு – இளைஞரணி – பத்திரிகையில் வந்த செய்திகளை காண்பித்தனர்.




திருச்சி வடக்கு – தெற்கு மற்றும் திருச்சி கிழக்கு மாநகர இளைஞரணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தை குறிஞ்சி இல்லத்தில் நேற்று முன்தினம் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தினார். தீரர் கோட்டமாம் திருச்சியில் இளைஞரணி பொறுப்புக்கு வந்த இந்த ஓராண்டில், அவர்கள் ஆற்றியுள்ள கழகப்பணி – இளைஞரணி பணிகளை மினிட் புத்தகம் – பத்திரிகை செய்திகள் – புகைப்படங்கள் வாயிலாக தலைமைக் கழகத்தால் இளைஞரணிக்கு வழங்கப்பட்டுள்ள பணிகள் – கலைஞர் நூற்றாண்டையொட்டி இளைஞரணியால் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள் & முன்னெடுப்புகள் – இல்லந்தோறும் இளைஞரணி பணி – இளைஞரணி மாநில மாநாட்டுக்கான ஒருங்கிணைப்பு – நாடாளுமன்றத் தேர்தலில் கழக வேட்பாளர்களுக்காக பணியாற்றியது குறித்து அவர்களின் அடுத்தகட்டப் பணிகளை வலிவோடும் – பொலிவோடும் மேற்கொள்ள வழிகாட்டுதல்களை அவர் வழங்கி வாழ்த்தினார்.




முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திருச்சி மத்திய மாவட்டம் மற்றும் திருச்சி மேற்கு மாநகரக் கழகங்களின் இளைஞரணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களின் பணிகளை நேற்று முன்தினம் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது, கழகப்பணி – மக்கள் பணியில் திருச்சி மத்திய மாவட்டம் & திருச்சி மேற்கு மாநகர் இளைஞரணியினர் ஈடுபட்டு வரும் விதம் குறித்து விரிவாக கேட்டறிந்தார். இளைஞரணி பொறுப்புக்கு நியமிக்கப்பட்டு ஓராண்டு நிறைவுற்றுள்ள நிலையில், தலைமைக்கழகம் அறிவிக்கின்ற பணிகளை செய்து முடிக்கின்ற விதம் – நீட் தேர்வுக்கு எதிராக இளைஞரணி முன்னெடுத்த போராட்டங்களில் இளைஞர்களை பங்கெடுக்க வைத்தது – முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களை மக்கள் பயன்படும் வகையில் நடத்தியது – சேலம் மாநாட்டின் வெற்றிக்காக ஆற்றியப் பணிகள் – நாடாளுமன்ற தேர்தல் மற்றும் விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் உழைத்தது குறித்தெல்லாம் தனித்தனியாக விளக்கிக் கூறினர். கழக இளைஞரணியின் முக்கிய முன்னெடுப்பான ‘இல்லந்தோறும் இளைஞரணி’ மூலம் உறுப்பினர் சேர்க்கை மேலும் தீவிரப்படுத்த வேண்டும் என்றும் – #Kalaignar100 பேச்சுப் போட்டியை மாபெரும் வெற்றி பெறச் செய்கிற அளவுக்கு மாணவர்களை பங்கெடுக்க செய்ய வேண்டுமெனவும் அறிவுறுத்தினோம். அப்போது மினிட் புத்தகம் – பத்திரிக்கை செய்திகள் – புகைப்படத் தொகுப்புகள் – கழக நிகழ்ச்சிகள் தொடர்பான துண்டறிக்கைகள் போன்றவற்றை காண்பித்து, அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் தங்களின் பணிகளை அவரிடம் எடுத்துரைத்தனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.07.2024) தமிழ்நாட்டைச் சேர்ந்த தேசிய வில்வித்தை வீராங்கனை கண்மணி அவர்களுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பாக போட்டிகளில் பங்கேற்க ரூ. 2.8 இலட்சம் மதிப்பிலான சர்வதேச தரத்திலான வில்வித்தை உபகரணத்தை வழங்கினார். உடன் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி உள்ளார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.07.2024) பன்னாட்டு அளவிலான சைக்கிள் போட்டியில் பங்கேற்க இருக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த சைக்கிள் வீரர் பிரதீப் சங்கர் அவர்களுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பாக ரூ.16 இலட்சம் மதிப்பிலான சர்வதேச தரத்திலான சைக்கிளை வழங்கினார். உடன் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி உள்ளார்.